# වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

# வருடாந்த செயற்திறன் அறிக்கை

# ANNUAL PERFORMANCE REPORT

# 2016

## නගර සැලසුම් හා ජල සම්පාදන අමාත්‍යාංශය

## நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

## MINISTRY OF CITY PLANNING AND WATER SUPPLY

අංක. 35, "ලක්දිය මැඳුර" නව පාර්ලිමේන්තු පාර, පැලවත්ත, බත්තරමුල්ල.
இல 35, "லக்திய மெதுர" புதியபாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல
**No. 35; "Lakdiya Medura", New Parliament Road, Pelawatta, Battaramulla.**

# வருடாந்த

# செயற்திறன் அறிக்கை

# 2016

## நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு

இல 35 “லக்திய மெதுர” புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்த, பத்தரமுல்ல
தொலைபேசி 011-2177240, 011-2177241
தொலைநகல் - 011-2177242
மின்னஞ்சல் - secretary@mcpws.gov.lk
இணையதளம் – www.mcpws.gov.lk

## நோக்கு

திட்டமிடப்பட்ட நகரங்கள், பாதுகாப்பான குடிநீர் மற்றும் மேம்படுத்தப்பட்ட துப்பரவேற்பாட்டு வசதிகளை அனைவருக்கும் வழங்குதல்

## பணிக்கூற்று

அனைத்து இலங்கையருக்கும் தரமான வாழ்க்கை வாழ்வதற்கான திட்டமிடப்பட்ட நகர அபிவிருத்தி, குடிநீர் விநியோகம் மற்றும் பாதுகாப்பான சுகாதார வசதிகளை வழங்குவதற்குரிய கொள்கைகளை வகுத்தல், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை அமுல்படுத்துதல், மதிப்பீடு செய்தல்

## கௌரவ அமைச்சரின் செய்தி



நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சினால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினதும் மண்புமிகு பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களினதும் வழிகாட்டலுக்கமைய அதிகரித்துவரும் சனத்தொகைக்கேற்ப பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்கும் இன்றியமையாத பெரும் பணியை ஆற்றுகின்றது.

நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதேசஅலுவலகங்கள் மூலம் தொடர்ச்சியாக நீரை வழங்குவதற்கு பிரதேச அலுவலகங்களில் உள்ளபயிற்சிமிக்கஆளணியினர்பெரும் பணியாற்றுவதுடன் தேசியசமூகநீர் வழங்கல் திணைக்களம் மற்றும் சமூகஅமைப்புக்களும் இனைந்து சிறந்த முகாமைத்துவத்துடன் பெரும் பணி ஆற்றுவதற்கு பாரிய ஒத்துழைப்பை வழங்குகின்றது. 2016 ஆம் ஆண்டில் நாட்டில் பலபிரதேசங்களில் தொடர்ந்து ஏற்பட்ட கடுமையான வறட்சிக்கு முகங் கொடுத்த நாம் இச்சவாலை ஆக்கபூர்வமாக எதிர்கொண்டு மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கும் பாரிய பொறுப்பை நிறைவேற்ற முடிந்தது அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார பாதுகாப்பு வசதிகளை வழங்குவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேரான அபிவிருத்தி இலக்கினை நிர்ணயித்து இச் சிறப்பான குறிக்கோளை அடைவதற்கு அமைச்சின் மூலம் சிறந்த வழி முறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. விசேடமாக நீரில் உவர் தன்மையுள்ள பிரதேசங்களுக்கு பாரிய நீர்சேகரிப்பு முறையை மேற்கொள்ளல் மற்றும் நீரை பாதுகாக்கும் முகாமைத்துவம் தேவைப்படுவதுடன் அதற்குதேவையான வழிமுறைகளை அமுல்படுத்தல். சுத்தமான சுற்றுச் சூழலை அமைத்துக் கொள்ளல் நீர் மாசுபடுவதைத விர்த்தல் விஷேடமாக நீர் விரயத்தை எதிர்த்து சமூக அமைப்புக்களும் பொது மகக்ளும் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவது சமகால கடமையாக உள்ளது.

அரசாங்கத்தின் மூலம் பொது மக்களுக்கு வழங்கும் 1000 மி.லீசுத்தமான குடிநீருக்கு 12/=ரூபா கட்டணம் சகாய முறையில் அறவிடப்படுகின்றது எவ்வாறாயினும் இதற்கு 49/=ரூபா செலவாகின்றது நீர் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருந்த போதிலும் இன்னும் இவ்விடயம் நடைமுறைப்படுத்தப்படவில்லை 60/=ரூபாவுக்கு சந்தையில் போத்தலில் அடைக்கப்பட்ட ஒருலீட்டர் நீரை வாங்கும் நுகர்வோர் நீர்கட்டனத்தை அதிகரிக்க எடுக்கும் முயற்சிக்கு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

மக்களுக்கு பாதுகாப்பான நீரை தொடர்ந்து வழங்குவதற்கு அசாங்கம் கடமைப்பட்டுள்ளது நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடைவதற்க்கு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும்படி பொதுமக்களிடமும் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களிடமும் நீரை சிக்கனமாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துமாறு நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**ரவூப் ஹக்கீம் (பா. உ)**

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

## கௌரவ ராஜாங்க அமைச்சரின் வாழத்துச்செய்தி



முன்னோர்கள் நீர்நிலைகளுக்கு அண்மையில் தமது வசிப்பிடங்களை அமைத்துக் கொண்டது பருகுவதற்கும், விவசாயத்திற்கும் தேவையான நீர்வசதிகளை பெறுவதற்கிருந்த வாய்ப்பினாலாகும். காலபோக்கில் மக்கள் தொகை அதிகரிப்புடன் தமது வசிப்பிடங்களை வேறு பிரதேசங்களுக்கு மாற்றினாலும், நீர் வசதிகள் அவர்களின் பிரதான இலக்காக மாறியது. அப்போது அவர்களுக்கு தேவையான நீர் கிடைக்கப்பெற்றப்போதிலும் சமகாலத்தில் நீரானது விரும்பியவாறு பாவிக்கும் நிலையில் காணப்படவில்லை. இருக்கின்ற நீர்வளங்களும் காலநிலை வேறுபாடுகளால் அரிதானதாகி உள்ளது.

தற்போது எமது நாட்டில் சில பிரதேசங்களில் நிலவும் வரட்சி காரணமாக நீர் நிலைகள் வற்றிவருகின்றன. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் இன்நிலைமை மகிழ்ச்சிக்குரியதாக இல்லை. தற்போது நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை குடிநீரை தொடர்ச்சியாக விநியோகிப்பதுடன் சபையால் அனுக முடியாத பிரதேசங்களுக்கு தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் நீர் வழங்கள் அமைப்புகளுடன் இணைந்து அப்பிரதேசங்களிள்லுள்ல நீர்ஏந்துபகுதிகலை அபிவிருத்தி செய்து சிறுஅளவிலான நீர்விநியோக திட்டங்கள் மூலமாக சபையால் அணுக முடியாத பிரதேசங்களுக்கும் நீரைவிநியோகிக்கின்றது. எவ்வாறாயினும் அமைச்சு என்றவகையில் எமக்கு பாரிய சவாலாகும்.

2017 பேண்தகு அபிவருத்திக்கான பிரவேச ஆண்டாகும். 2030 ஆகும்போது இந்நோக்கத்தை அடைவதற்கு நாம் செய்யவேண்டியன அதிகமாகும். அதன்கீழ் 06வது நோக்கமானது அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீரையும், சுகாதார வசதிகளையும் வழங்குவதாகும். நாடு என்றவகையிலும், அமைச்சு என்றவகையிலும் உலக மக்களுக்கு நல்லதொரு செய்தியை வழங்கவேண்டியுள்ளது. நீர்நிலைகள் வற்றுவது, நீர்நிலைகள் மாசடைவது என்பன இந்நோக்கத்தை அடைந்து கொள்வதிலுள்ள தடைகளாகும். இயற்கை நிலைமைகளை கட்டுப்படுத்த முடியாவிடினும், மனித செயற்பாடுகளால் ஏற்படும் நிலைமைகளை தடுப்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். கொழும்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் திணைக்களத்தால் விநியோகிக்கப்படும் தூயநீர் பெருமளவில் விரையமாக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அதுமட்டுமன்றி கிராமிய மட்டத்திலும் முறையாக நீரை பாவிப்பதில் பலர் அக்கறையின்றி செயற்படுகின்றனர்.

மேலும், சுகாதார வசதிகள் தொடர்பாக ஆராயும்போது அதற்காக குறைந்தளவில் அவதானம் செலுத்தப்படுவது பாரிய பிரச்சினையாகும். அமைச்சினால் சுகாதார வசதிகள் மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும், அவற்றை முறையக பயன்படுத்துவது ஒரு குழுவினரால் மாத்திரம் முடியாத காரியமாகும். பொதுவாக நோக்குமிடத்து தூயகுடி நீரை விநியோகிப்பதும், சுகாதார வசதிகளை மேம்படுத்துவதும் எமது கடமையாக போதும், பாடசாலைகள், சமூக அமைப்புகள் போன்ற கீழ்மட்ட அமைப்புகள், ஊடகங்கள் மூலமாக இவற்றின் முக்கியத்துவம் தொடர்பாக விழிப்புணர்வு ஊட்டப்படல் வேண்டும். அரிதாக வளமாகத்திகமும் நீரை சிக்கணமாகப் பாவிப்பதற்கு மக்களை ஊக்குவிப்பது சகலரினதும் கடமையாகும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

**நிபுணத்துவ வைத்தியர் சுதர்சனி பெர்னாந்துபுள்ளே (பா.உ)**

நகர திட்டமிடல், நீர்வளங்கள் அமைச்சு

**அமைச்சு செயலாளரின் செய்தி**



இலங்கையர்ளான நாம் சிறப்புமிக்க நீர்வளநாகரீகத்தை உரிமையாக கொண்டுள்ளோம். நதிகள், நீர்வீழ்ச்சிகள், குளங்கள், தடாகங்கள் போன்றவற்றால் வளமூட்டப்பட்ட இந்நாடு எமக்கு உன்னதமான கலாசாரத்தை வழங்கியுள்ளது. இந்த பெறுமதிமிக்க சொத்துக்களை வித்தாகக் கொண்டு தூய பாதுகாப்பான நீர் குழாய்கள் மூலம் வீடுகளுக்கு வருவதற்கு பாரிய நீர்வழங்கள் திட்டங்கள், சிறு, மத்திய தரத்திலான நீர்வழங்கள் திட்டங்கள் மற்றும் தேசிய வங்கிகள் மூலமான நிதிகளை பெற்ற நீர்விநியோக திட்டங்கள் காரணமாகின்றன. இதற்கு மேலதிகமாக தேசிய மக்கள் அடிப்படை நீர் திட்டமிடல் திணைக்களத்திற்குரிய மக்கள் அடிப்படை அமைப்புகள் மூலம் முன்னெடுக்கப்படும் நீர்விநியோக திட்டங்கள் ஊடாக கிராமப்புற மக்களின் நீர் தேவைகள் பூர்த்திசெய்யப்படுகின்றன. இதன்படி 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் 2.09 மில்லியன் குழாய் நீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன், மொத்த சனத்தொகையில் 47.7 வீதமானோருக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கமுடிந்துள்ளது. இது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.8% வீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. 2020 ஆண்டாகும்போது குழாய்நீரை 60% வழங்குவது அமைச்சின அடுத்த இலக்காகும்.

பாதுகாப்பான குடிநீரை குழாய்கள் மூலம் விநியோகிப்பது எமது பிரதான எதிர்பார்ப்பாகும். எனினும் நீண்டதூரத்திற்கு குழாய் இணைப்புகள் இல்லாத பிரதேசங்களுக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை (RO Plants) பொறுத்துதல், மழைநீர் தாங்கிகளை அமைத்தல், பவுசர் மூலம் குடிநீர் விநியோகம் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கேற்ப 2016 ஆம் ஆண்டில் 303கி.மீற்றர் தூரத்திற்கு குழாய்கள் பொறுத்தப்பட்டுள்ளதுடன், மூல காரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய்த் தாக்கம் காணப்படும் வடமத்திய மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு, பாதுகாப்பான குடிநீரை வழங்கள் 2016 ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் நீர்சுத்திகரிப்பு இயந்திரங்கள் (RO Plants) 62 உம், குறித்த பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் சிறிய நீர்சுத்திகரிப்பு இயந்திரங்கள் 94 உம் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் குறித்த நோயை கட்டுப்படுத்த முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மூல காரணம் இனங்காணப்படாத சிறுநீராக நோய்க்குரிய மூலகாரணியை கண்டறிவதற்காக சீன நாட்டு விஞ்ஞான அகடமியும் நகர திட்டமிடல், நீர்வளங்கள் அமைச்சும் கையொப்பமிட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் பேராதெனியவில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்ட உயர்மட்ட நீர் பரிசோதனை உபகரணங்ளைக்கொண்ட ஆய்வுகூடத்தை விரைவாக நிருமானிப்பது எனது இலக்குகளில் பிரதானமானதாகும்.

மேலும், 2 வீதமாக காணப்படும் நகர்ப்புறங்களில் குழாய்கள் மூலம் கழிவுநீரகற்றல் முறைமையை 2020 ஆகும்போது 3.3% வரையில் அதிகரிபதற்கான கழிவுநீர் முகாமைத்துவ திட்டங்கள் தற்போது நடைமுறையிலுள்ளன. வருமானமற்ற நீர்வழங்கள் 2016 ஆண்டு நிறைவில் 25.5% ஆக காணப்பட்டதுடன், இது 2015 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.1% வீதம் குறைந்துள்ளது. இதனை 2020 ஆண்டாகும்போது 20.5% ஆக குறைப்பற்கு கவனம் செலுத்தப்படுகின்றது.

உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட நீர்விநியோகம் மற்றும் சுகாதார அபிவிருத்தி திட்டங்கள் மூலம் 7 மாவட்டங்களில் நீர்விநியோகம் மற்றும் சுகாதார வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இத்திட்டங்களினால் நகர, கிராம, தோட்ட மக்களின் தாகம் தீர்க்கப்படுவது மட்டுமன்றி சுகாதாரம் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படுகிறது.

குடிநீரை சுத்திகரித்து மக்களுக்கு வழங்கும் பாரிய பொறுப்பில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினதும் மாண்புமிகு பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களினதும் ஆசீர்வாதத்தினாலும் வழிகாட்டலினாலும் நகர திட்டமிடல், நீர்வளங்கல் அமைச்சு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மற்றும் தேசிய நீர் வழங்கள் திணைக்களம் என்பன நிறைவேற்றும் பணிகள் காரணமாக 2016 ஆம் ஆண்டில் எமக்கு பெருமளவு சவால்களை வெற்றிகொள்ள முடிந்துள்ளதுடன் எமது கௌரவ அமைச்சருடனும், கௌரவ ராஜாங்க அமைச்சருடனும் ஒன்றினைந்து எமது இலக்கை நாம் நிறைவேற்றுவேம்.

**சரத் சந்திரசிரி விதான**

செயலாளர்

# பொருளடக்கம்

## முதலாவது அத்தியாயம்


- அறிமுகம், கருமங்கள் 1-2
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் 3-4
- இலங்கையின் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகள் 5-7
- கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் செயற்திறனை அளவிடுவதற்கான சுட்டிகள் 8


## இரண்டாவது அத்தியாயம்


- செயற்திறனை அடைவதற்காக 2016 ஆண்டில் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் நிறைவேற்றிய கருமங்கள்
  - கருத்திட்டங்களின் சுருக்கம் 9
  - அமைச்சினால் நேரடியாக அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் நிறைவேற்றிய கருமங்கள் 10-32
  - தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிறைவேற்றிய கருமங்கள் 33-56
  - தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிறைவேற்றிய கருமங்கள் 57-65


## மூன்றாவது அத்தியாயம்


- 2016 அடையப்பட்ட இலக்கு 66
- 2016 புதிய நீர் இணைப்புக்கள்ளின் இலக்கு மற்றும் வழங்கிய தொகை (மாகாண, மாவட்ட ரீதியில்) 67
- நிறைவுக் குறிப்பு 68-69

**அறிமுகம்**

வளி, நீர், உணவு ஆடை அணிகலன்கள் மனித இனத்தின் அடிப்படைத் தேவைகளாகும். வளி மனிதனின் அடிப்படைத் தேவையாக இருந்தபோதிலும் தூய்மையான வளி மிகவும் வரையறுக்கப்பட்ட சுற்றாடல் தவிர்ந்த ஏனைய இடங்களில் இன்னும் இயல்பாகப் பெறக்கூடிய இயலுமையுள்ளது. கடந்தகாலங்களில் தூய்மையான நீரை இலகுவாகப் பெறக்கூடியதாக இருந்தபோதிலும் சனத்தொகை அதிகரிப்பு, கைத்தொழில்களின் அதிகரிப்பு போன்றவற்றால் இயற்கைச் சூழல் அழிவடைதல் மற்றும் காலநிலை மாற்றங்கள் உள்ளிட்ட பல காரணங்களால் தூய்மையான குடிநீரை பெற்றுக் கொள்வது இன்று சிரமமான விடயமாக மாறியுள்ளது. நீரானது உயிரொன்றின் பிறப்பிலும் இருப்பிலும் கைத்தொழில் அபிவிருத்தியிலும் முதன்மையான தீர்மானிக்கும் காரணியென்பதனால் அனைத்து அரசாங்கங்களுக்கும் தமது நாட்டு மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குதல் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான நீரை வழங்கவேண்டிய பொறுப்புள்ளது.

அனைத்து நாடுகளிலுமுள்ள மக்களுக்கு பாதுகாப்பாக வழங்குவதன் முக்கியத்துவம் காரணமாகவே இது தொடர்பில் சர்வதேச ரீதியிலும் கவனம் செலுத்தப்பட்டதன் பெறுபேறாக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் மிலேனியம் அபிவிருத்தி இலக்கு உருவாக்கப்படும்போது இலக்குக் குறிக்கோள் இல. 07 இல் 1990 ஆண்டில் 64% ஆக இருந்த பாதுகாப்பான குடிநீர் வழங்களை 2016 ஆண்டளவில் 89.7% வரை அதிகரிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன், அதனை அடைய முடிந்துள்ளது.

மிலேனியம் அபிவிருத்தி இலக்கை இற்றைப்படுத்தி நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை உருவாக்கும் போது பாதுகாப்பான குடிநீர் வழங்கலின் முக்கியத்துவம் காரணமாக 2030 ஆம் ஆண்டளவில் நீரின் தரத்தை மேம்படுத்துதலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பான குடிநீர் சுகாதாரம் தொடர்பாக சர்வதேச ரீதியில் இலங்கை எட்டியுள்ள உடன்பாடுகள் மற்றும் தமது நாட்டு மக்களுக்கு குடிநீரை வழங்கும் பொறுப்பும் விசேடமாக குடிநீர் சார்ந்ததாக நாட்டின் சில பிரதேசங்களில் மக்கள் முகங்கொடுத்துள்ள சீறுநீரக நோய் நிலையும் காரணமாக இலங்கை அரசும் பாதுகாப்பான குடிநீர் வழங்கல் தொடர்பில் சிறப்பான கவனத்தைச் செலுத்தியுள்ளது.

பாதுகாப்பான குடிநீர் வழங்கல் தொடர்பிலான அரசின் இந்த முன்னுரிமையான, சிறப்பான குறிக்கோளை அடைவதற்காக கொள்கை வகுத்தல், அமுல்படுத்துதல், மதிப்பீடு செய்தல் செயற்பாடுகளுக்காக அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குமுகமாக தனியான அமைச்சொன்று அனைத்து அரசுகளாலும் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2015 ஜனாதிபதித் தேர்தலின் பின்னரும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு எனும் பெயருரைய அமைச்சு 1870/15 இலக்க 2015.01.18 திகதிய வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைச்சின் கீழ் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, காணி மீட்பு கூட்டுத்தாபனம் ஆகிய திணைக்களங்களும் நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன.

2015 ஆகஸ்ட் பொதுத்தேர்தலின் பின்னர் அமைச்சின் விடய தானம் மீலாய்வின் பின்னர் அதற்கமைய 1933/13 இலக்க 2015 செப்டெம்பர் 21 திகதி வர்த்தமானி மூலம் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு பிரகடனப் படுத்தப்பட்டதுடன் இந்த அமைச்சின் கீழ் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய நீர் வழங்கல் திணைக்களமும் உள்ளடங்குகின்றன. விடய தானம் மீளாய்வு செய்யப்பட்டாலும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகலை வழங்கும் பொருப்பு இந்த அமைச்சுக்கு தொடர்ந்து உள்ளது

**கருமங்கள்**

- நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் விடயங்களுடன் தொடர்புடைய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்ங்களை உருவாக்குதல் மற்றும் உரிய திணைக்களங்கள், நியதிச் சபைகளின் விடயப்பரப்புக்களுடன் தொடர்புடைய விடயங்களின் மேற்பார்வை மற்றும் மதிப்பீடு.

- விசேட நகரத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி விடயங்கள்
- நகர அபிவிருத்தி செயற்பாடுகளின்போது தேசிய பௌதீக திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அனைத்து நிர்மாண நடவடிக்கைகளையும் நெறிப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்

- அனைத்து குடிமக்களுக்கும் தூய குடிநீரை வழங்குதலை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
  நீர் வழங்கல் சேவைகள், மலக்கழிவகற்றல் முறைமை மற்றும் சுகாதார வசதிகள் தொடர்பில் பரிசோதித்தல், திட்டமிடுதல், திட்டத்தைத் தயாரித்தல், நிர்மாணங்களை நெறிப்படுத்தல் மற்றும் பராமரித்தல்

- சமூக நீர் வழங்கல் மற்றும் சுகாதாரக் கருத்திட்டங்களை வினைத்திறனாகவும், முறைப்படியும் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்

- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் ஆகியவற்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் நடவடிக்கைகளை எடுத்தல்

- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் ஆகியவற்றின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.

**அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள்**

2015 ஆகஸ்ட் பொதுத்தேர்தலின் பின்னர் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1993/13 இலக்க 2015 செப்டெம்பர் 21 திகதிய அதிசிறப்பு வர்த்தமானி மூலம் நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் கீழ் பின்வரும் இரண்டு நிறுவனங்கள் வழங்கப்பட்டன.

- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை
- தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை**

இலங்கையின் குடிநீர் வழங்கல் பொறுப்பு ஆரம்ப காலத்தில் அரச வேலைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பின்னர் 1965 இல் ஏற்படுத்தப்பட்ட நீர் வழங்கல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கையின் குடிநீர் வழங்கல் தொடர்பான வரலாற்றில் மிக முக்கியமான திருப்புமுனையானது குடிநீர் மற்றும் சுகாதார வசதி வழங்கலை முறைமைப்படுத்துவதற்காக 1975 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பாராளுமன்றச் சட்டமாகும். இச்சட்டத்தின் மூலம் தற்போதுள்ள தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை உருவானதுடன், அதன் கருமங்களை நிறைவேற்றத் தேவையான சட்டபூர்வ அதிகாரம் கிடைத்தது.

**ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள்**

- குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் இல்லாத விசேடமாக சுகாதார அச்சுறுத்தலுக்குட்பட்டுள்ள நபர்கள் மற்றும் பிரதேசங்களை இனங்காணுதல்

- உள்நாட்டு வெளிநாட்டு நிதியங்களின் உதவியுடன் நீர் வழங்கல் மற்றும் சுகாதார கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான அடிப்படை செயற்பாடுகளை ஆய்வுசெய்தல், திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துதல்

- நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களை அமுல்படுத்துதல், பேணிச்செல்லல் மற்றும் திருப்திகரமான சேவையை நுகர்வோருக்கு வழங்குதல்

- வழங்கப்படும் சேவைகளுக்காக நியாயமான கட்டண முறையை உருவாக்குதல், கட்டணம் அறவிடுதல்

- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் வழங்கப்படும் சேவைகளை நல்ல முறையில் பேணுவதற்குத் தேவையான மனிதவள அபிவிருத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்தலுக்குத் தேவையான தொழிநுட்பங்களை இனங்காணுதல், பாதீட்டை வகுத்தல் மற்றும் நிதிக் கட்டுப்பாடு உட்பட அவை தொடர்பான ஏனைய இணைவான கருமங்கள்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2016 ஆண்டில் 337 குடிநீர் வழங்கல் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வந்ததுடன், அதனூடாக பாதுகாப்பான குழாய்க் குடிநீர் 37.1% உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் குழாய்களால் 2% மலக்கழிவகற்றலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இச் சேவைகளைப் பேணிச்செல்லுதல் மற்றும் அபிவிருத்தி செய்தலுக்காக ரத்மலானயிலுள்ள அலுவலகத்துக்கு மேலதிகமாக 11 மாகாண அலுவலகங்களும், 25 மாவட்ட அலுவலகங்களும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு இருப்பதுடன், இந்த நிறுவனக் கட்டமைப்பில் பல்வேறு தொழில்களில் ஈடுபடும் 10,352 ஆளணியினர் 2016.12.31 அளவில் பணியாற்றுகின்றனர்.

**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்**

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் 2014/09/22 திகதிய வர்த்தமானி அறிவித்தல் ஊடாக 2014/09/19 ஆம் திகதியிலிருந்து செயற்படத்தக்கவாறு நிறுவப்பட்டது. விசேடமாக கிராமீயப் பிரதேசங்களில் வாழும் மக்கள் உட்பட மக்களுக்கு குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்கும் நோக்குடன் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் நிறுவப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் சேவைகள் கிட்டாத பிரதேசங்கள் தொடர்பில் இத் திணைக்களம் முதன்மையாக கவனம் செலுத்துகிறது.

**பணிகள்**

- இலங்கையின் அனைத்து கிராமிய மக்களுக்கும் அந்த சமூகத்தின் பங்களிப்புடன் தூய்மையான மற்றும் போதுமானளவு நீர், அடிப்படைச் சுகாதார வசதிகளை வழங்குதல்.

- சமூக மட்ட அமைப்புக்களின் நிதி முகாமைத்துவம் அடங்கலாக நல்லாட்சியை முறைமைப்படுத்தல்

- கிராமிய நீர்வழங்கல் துறையில் ஈடுபட்டுள்ள மற்றும் அதி துறையுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள், அமைப்புக்களை இணைப்புச் செய்தல்

- நீர் மூலங்களைப் பேணிப்பாதுகாத்தல் மற்றும் நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாப்பதற்காக பொறிமுறையொன்றை உருவாக்குதல்

- கிராமிய நீர்வழங்கல் துறைக்குத் தேவையான புதிய ஆராய்ச்சிகளை ஆரம்பித்தல்

இந்த நிறுவனத்தின் தலைமையகம் தலவத்துகொடவில் அமைந்துள்ளது. இலங்கையின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கக்கூடியவாறு மாவட்ட அலுவலகங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றில் பல்வேறு தொழில்களுக்குரிய 455 ஆளணியினர் பணியாற்றுகின்றனர்.

# இலங்கையின் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதிகளின் உள்ளடக்கம்

## பாதுகாப்பான குடிநீர் வழங்கல் உள்ளடக்கம்- டிசம்பர் 2016




மூலம்- தே.நீ.வ.ச

## குழாய்வழி நீர்இணைப்புக்கள் 1996 -2016




மூலம்- தே.நீ.வ.ச

## இலங்கையில் சுகாதார வசதிகளின் உள்ளடக்கம்




**மூலம்- தே.நீ.வ.ச**

**<u>பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரப்பாதுகாப்பு தொடர்பான கொள்கை மற்றும் தந்திரோபாயங்கள்</u>**

நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் பாதகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை வழங்குவது அரசின் முதன்மைக் கொள்கையாகும். ஆதற்காக பின்வரும் தந்திரோபாயங்கள் பின்பற்றப்படுகின்றன.

**<u>பாதுகாப்பான குடிநீர் தொடர்பான தந்திரோபாயங்கள்</u>**

- அதிகரித்துவரும் வீட்டு மற்றும் வீட சாராத கேள்வியைக் கருத்தில் கொண்டு குழாய் நீர் வழங்கலை அதிகரித்தல்
- பாதகாப்பான குடிநீர் பெற்றுக் கொள்ளும் போது பிரதேச ரீதியா நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்
- பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட காரணிகள் மற்றும் ஆகுசெலவு போன்றவற்றைக் கருத்திலெடுத்து புதிய நீர் வினியோகத் திட்டங்களை தழட்டமிடுதல்
- மூலகாரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய் பரவியுள்ள பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குதல்
- நீர் மூலங்கள்/துளுமங்நீர்வழிகள்/சமூக மட்ட அமைப்புக்களால் முகாமை செய்யப்படும் திட்டங்களின் நீரின் தன்மை மற்றும் அளவைக் கூட்டுதல்
- நீர்க் கருவிகள் / ஏனைய உதிரிப்பாகங்களுக்கு தராதரத்ங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் குழாய் நீர் வழங்கல் முறைமைகளை மேம்படுத்தல்
- மூலகாரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய்க்கான அடிப்படைக் காரணத்தை இனங்காண்பதற்காகவும் அந்த நோயைத் தவிர்ப்பதற்காகவும் நிலக்கீழ் நீரைத் தூய்மையாக்குவதற்காக மிகவும் சாத்தியம் மிக்க தூய்மையாக்கல் முறைமையை அறிமுகம் செய்வதற்காக தரமுயர்ந்த மற்றும் நவீன ஆராய்ச்சிகள் / ஆய்வுகளை மேற்கொள்ளல்
- கைத்தொழில் துறைக்கு 24 மணித்தியாலமும் நிலையான குழாய் நீர் பெறுதலுக்காக அதிகரித்துவரும் கேள்வியை நிறைவுசெய்தல்
- குழாய் நீர் வழங்கல் சேவைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் கொள்லளவை அதிகரித்தல்
- மக்கள் நேயமிக்க இலாபமீட்டும் நிறுவனமாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினை இயக்குவதற்கான வழிகாட்டல் வழங்கல்

**பாதுகாப்பான குடிநீர் தொடர்பான இலக்கு**

- 2020 ஆண்டளவில் அனைத்து இலஙகையருக்கும் பாதுகாப்பான குடிநீரை வழங்குதல்
- 2020 ஆண்டளவில் குழாய் நீர் வழங்கல் கொள்லளவை 60% வரை அதிகரித்தல்
- மூலகாரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய் பரவியுள்ள பிரதேசங்களுக்கு குழாய் நீர் வசதிகளை வழங்குதல்
- நீரின் தரத்தை 100% உறுதிசெய்தல்
- கைத்தொழிலுக்கான நீர்த் தேவையை 100% முழுமைப்படுத்தல்
- குடிநீர் வசதிகளை வழங்கும் சிறுவனக் கட்டமைப்பை வினைத்திறனாக்குதல்

**சுகாதார பாதுகாப்பு தொடர்பான தந்திரோபாயங்கள்**

- விசேடமாக கிராமிய மற்றும் தோட்டத்துறையும் அடங்கலாக சுகாதாரப் பாதுகாப்பு வசதிப் பயன்பாட்டை உயர்த்துதல்.

- சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுகதாரம் தொடர்பிலான கல்வி அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்தல்.

- முதன்மை நகரங்களில் வடிகாலமைப்பு வசதிகளை அதிகரித்தல் நாட்டின் கழிவு நீரகற்றல் சேவைகளை மிகவும் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக உதவியளிக்கக்கூடியவாறு தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபையின் நடவடிக்கைகளை மறுசீரமைத்தல்.

**சுகாதார பாதுகாப்பு தொடர்பான இலக்கு**

- நாடு பூராவும் 100% ஆரோக்கியமான சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை உறுதிப்படுத்தல்.

- 2020 ஆகும்போது நகர்ப்புற சனத்தொகையின் 3.3% த்தினருக்கு குழாய் மூலமான மலக்கழிவு வசதிகளை வழங்குதல்.

# அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களால் அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்களின் செயலாற்றுகையை அளவிடுவதற்கான சுட்டிகள்.

அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் செயலாற்றுகையை மதிப்பிடுவதற்காக அந்தந்த துறைகளின் பிரகாரம் பின்வரும் சுட்டிகளை பயன்படுத்தப்பட்டுள்து.

## I. குடிநீர் பாதுகாப்பு செயலாற்றுகை சுட்டிகள்

1. பாதுகாப்பான குடிநீர் வசதி விகிதாசாரம்
2. குழாய் நீர் வழங்கல் விகிதாசாரம்
3. நாடு முழுவதிலும் வருமானம் ஈட்டாத நீர்வழங்கல் விகிதாசாரம்
4. கொழும்பு நகரின் வருமானம ஈட்டாத நீர்வழங்கல் விகிதாசாரம்
5. ஒட்டுமொத்த குழாய் நீர் இணைப்புகளின் எண்ணிக்கை (தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாளமைப்பு சபை
6. ஆண்டில் வழங்குவதற்க்கு இலக்குவைத்த குழாய்நீர் தொடர்புகளின் அளவு, வழங்கியதன் விகிதாசாரம்

## II. சுகாதாரப் பாதுகாப்புக்கான செயலாற்றுகை சுட்டிகள்

1. போதுமானளவு சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளின் விகிதாசாரம்
2. குழாய் மூலமான மலக்கழிவகற்றல் விகிதாசாரம்

## III. குடிநீர் மற்று சுகாதார மேம்பாட்டு துறைகள் பற்றிய விழிப்புனர்வு

1. மக்களுக்கு விழிப்புணர்வு நடத்திய நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை
2. மாணவர்களுக்கு நடத்திய விழிப்புணர்வு திட்டங்கழின் எண்ணிக்கை

## IV. ஊழியர்களின் திறன்

குழாய் நீர் தொடர்புகள் 1000 க்கு உள்ள மொத்த ஊழியர்கள்

# இரண்டாவது அத்தியாயம்

# 2016 ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் 2016.12.31 திகதிக்கான முன்னேற்றம்

| இல | கருதிட்டம் | ஒதுக்கிடு (ரூ.மி) | 2016.12.31 திகதிக்கான நிதி முன்னேற்றம் | | கையிருப்பு பில்கள் | நிதி முன்னேற்றம்(ளையிருப்பு பில்களுடன்) 2016.12.31 திகதிக்கு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ.மி.) | % | | (ரூ.மி.) | % |
| **நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமச்சு** | | | | | | | |
| 1 | மழைநீர் சேகரிப்புக் திட்டத்தினை நடைமுறை படுத்தல் | 5.00 | 4.48 | 90% | - | 4.48 | 90% |
| 2 | நீர் வளப் பிரதேசங்கலை பாதுகாத்தல் நீர் ஏந்துப்பகுதிகல் மாசடைவதைத்தடுத்தல் | 5.00 | 5.00 | 100% | - | 5 | 100% |
| 3 | சுகாதார பாதுகாப்பு தொடர்பான தெற்காசிய மாநாட்டின் மீழாய்வு – அகில இலங்கை சுகாதார நிகழ்ச்சி திட்டம் | 23.00 | 22.9 | 100% | 0.75 | 23.65 | 103% |
| 4 | கிராமிய நீர் வழங்கல் சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | 200.00 | 131.94 | 66% | 10.02 | 141.96 | 71% |
| 5 | வடமத்திய மாகாணத்தில் நீரினால் ஏற்படும் நோயினை கட்டுப்படுத்தல் | 1,000.00 | 680.15 | 68% | 135 | 815.15 | 82% |
| **A** | **உப மொத்தம்(1+2+3+4+5)** | **1,233.00** | **844.47** | **68%** | **145.77** | **990.24** | 80% |
| 6 | உலக வங்கி நிதி உதவியில் இயங்கும் நீர் வழங்கல் சுகாதார மேம்பாட்டு கருதிட்டம் | 2,350.00 | 481.00 | 20% | - | 481.00 | 20% |
| 7 | நகர திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் | 2,500.00 | 837.33 | 33% | 652.67 | 1,490.00 | 60% |
| **B** | அமச்சின் கருத்திட்டங்கலின் மொத்தம்**(A+6+7)** | **6,083.00** | **2,162.80** | **36%** | **798.44** | **2,961.24** | **49%** |
| **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை** | | | | | | | |
| 8 | மோரட்டுவ,இரத்மலானை மற்றும் ஜா எல ஏக்கலைப் பகுதிகலில் கழிவு நீர் வெளியகற்றல் முறை (சுவிடன்) | 16.00 | 24.16 | 151% | - | 24.16 | 151% |
| 9 | கொழும்பு பகுதியில் வீட்டுக் கழிவுநீர் தொடர் அமைப்புக்கலை அதிகரித்தல் சுகாதாரப் பாதுகாப்புக்கான சந்தர்ப்பத்தை மக்களுக்கு வழங்குதல் | 400.00 | 275.70 | 69% | - | 275.7 | 69% |
| 10 | உலர் வலய நகர நீர் சுகாதார பாதுகாப்பு கருத்திட்டம் - (ஆசிய அபிவிருத்தி வங்கி ) | 1,123.00 | 464.54 | 41% | - | 464.54 | 41% |
| 11 | நீர் மற்றும் சுகாதார பாதுகாப்பு அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம்(GOSL-UNICEF) | 6.49 | 0.82 | 13% | - | 0.82 | 13% |
| 12 | பாரியஅளவிலான நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் திட்டம்(Disbursement of Ongoing Projects) | 25,000.00 | 23,570.18 | 94% | - | 23570.18 | 94% |
| 13 | பாரிய அளவிலான நீர் மற்றும் கழிவுநீர் திட்டங்கல் (நிதி அமச்சிகன் கருவூலம் ) | 7,000.00 | 4,641.49 | 66% | - | 4641.49 | 66% |
| **C** | **உப மொத்தம் (8+9+10+11+12+13)** | **33,545.49** | **28,976.89** | **86%** | **-** | **28,976.89** | 86% |
| 14 | அபிவிருத்தியடைந்து வரும் சிறுநகர் நீர் வழங்கல் கருத்திட்டங்களின் நிலுவை | 1,000.00 | 945.64 | 95% | - | 945.64 | 95% |
| 15 | பயன்பாட்டு மாற்றீடு / மாற்று காரணமாக துரிதப்படுத்தப்பட்ட பிரதேச சபை வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் | 500.00 | 161.87 | 32% | - | 161.87 | 32% |
| **D** | **உப மொத்தம்(14+15)** | **1,500.00** | **1,107.51** | **74%** | **-** | **1,107.51** | 74% |
| **E** | **தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (C+D)** | **35,045.49** | **30,084.40** | **86%** | **-** | **30,084.40** | **86%** |
| **தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்** | | | | | | | |
| 16 | சமூக நீர் வழங்கல் முரைகலை மேம்படுத்தல் | 100.00 | 76.99 | 77% | 17.76 | 94.75 | 95% |
| **F** | **திணைக்களத்தின் மொத்தம் (16)** | **100.00** | **76.99** | **77%** | **17.76** | **94.75** | **95%** |
| | **முழு மொத்தம்(B+E+F) (உள்ளுர் வங்கிகள் நிதியுதவியின் கீழ் இயங்கும் திட்டங்கள் தவிர்ந்த )** | **41,228.49** | **32,324.19** | **78%** | **816.2** | **33,140.39** | **80%** |
| | ஊள்ளுர் வங்கிகள் நிதியுதவியில் இயங்கும் திட்டங்கள் | 23,322.15 | 11,003.00 | 47% | - | 11,003.00 | 47% |
| | **முழு மொத்தம் (உள்ளுர் வங்கியின் நிதி உதவியின் கீழ் இயங்கும் திட்டங்களுடன்)** | **64,550.64** | **43,327.19** | **67%** | **-** | **44,143.39** | **68%** |

# ① அமைச்சினால் நேரடியாக அமுல்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் நிறைவேற்றிய கருமங்கள்

- **கருத்திட்டங்கள்**

1. மூலகாரணம் அறியப்படாத சிறுநீரக நோய் பரவும் பிரதேசங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குதல்
2. SACOSAN(தெற்காசிய சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான மாநாடு) பிரகடனத்துக்கமைய சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்.
3. மழை நீர் சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டம்
4. நீரேந்து பிரதேசங்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டம்
5. கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு மேம்படுத்தல், சமூகஉட்கட்டமைப்புவசதிகளை அபிவிருத்தி செய்தல
6. கழிவு நீர் முகாமைத்துவம் மற்றும் மழை நீர் சேகரித்தல் தொடர்பில் அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தொழில்நுட்ப அலுவலர்களுக்காக நடாத்தப்படும் பயிற்சிகள்
7. நகர திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி
8. நீர் வழங்கல், சுகாதாரப் பாதுகாப்பு மேம்படுத்தல் கருத்திட்டம் (உலக வங்கி, இலங்கை அரசு)

## 01. மூல காரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய் கட்டுப்பாட்டுக்காக பாதுகாப்பான குடிநீர் வழங்கல்

தற்போது அனுராதபுரம், பொலன்னறுவை. குருணாகல், வவுனியா, மாத்தளை, பதுளை, அம்பாந்தோட்டை, அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் உயிர்கொல்லி. தொற்றா நோயாக பரவி வரும் மூலகாரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய்த் தாக்கத்திற்குட்பட்டுள்ள பிரதேசங்களில் வள்ந்துவரும் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கும் நோக்குடன் குறுங்கால, இடைக்கால, நீண்டகால ரீதியிலான நிகழ்ச்சித்திட்டங்களை இனங்கண்டு அந்த நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2016 ஆம் ஆண்டில் 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 680.15 மி.ரூபா செலவிடப்பட்டு கீழ் குறிப்பிடப்பட்ட கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டது. ஆண்டின் இறுதியளவில் 68% நிதி முன்னேற்றம் அடயப் பட்டுள்ளது.

இதன்போது அமுல்படுத்தப்படும் செயற்திட்டங்களில் நீர்க்குழாய் நீடிப்பின் மூலமாக தூய நீர் வழங்கல் முதன்மையானதாகும். 2016ஆம் ஆண்டில் 303 கிலோ மீற்றர் அளவில் நீர்க்குழாய் நீடிக்கப்பட்டுள்ளதுடன் நீர்க்குழாய் நீடிப்பு செய்யமுடியாத பிரதேசங்களுக்கு நீர் சுத்திகரிப்பு பொறிகளை நிறுவுதல் (RO Plants) மழை நீர் தாங்கி நிர்மாணித்தல், பவுசர் மூலம் குடிநீர் வழங்குதல் போன்ற செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றது.

- 2016 ஆம் ஆண்டில் நீர் சுத்திகரிப்பு பொறிகளை பொருத்துதல் திட்டத்தில் 62 பொறிகள் பொருத்தப்பட்டுள்ளது. இதன்போது மதவாச்சி, கெப்பிற்றிக்கொல்லாவ, ரம்பாவ, கொரவப்பொததான நுவரகம் பளாத்த(மத்திய), கலேன்பிந்துனுவெவ கஹடகஸ் திகிலிய, அலஹர, பக்கமூன, மொனராகலை, பதுளை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, குருணாகல், ஆகிய பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது பாடசாலைகளுக்கு நீர் சுத்திகரிப்பு பொறிகள் 94 வழங்கப்பட்டுள்ளது.

- பவுசர் மூலம் நீர் வழங்கல், குழாய்க் கிணறு மூலம் நீர் வழங்கல், மழைநீர் தாங்கிகளை நிர்மாணித்தல் போன்றவை இத்திட்டத்தின் ஏனைய செயற்பாடுகளாகும்.

- மூலகாரணம் இனங்காணப்படாத சிறுநீரக நோய்க்கான மூல காரணத்தை இனங் காண்பதற்காக சீன - இலங்கை நாடுகளுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை இரண்டு கையெழுத்திடப்பட்டது.

**மூல காரணம் தெரியத சிறுநீரக நோய்க்காரணியின் மூல காரணத்தை புலனாய்வு செய்தற்பொருட்டு நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சுக்கும் சீன விஞ்ஞான கல்வியகத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

உயிர் கொள்ளி தொற்றா நோயாக பரவிவரும் மூல காரணம் இனங்கானப்படாத சிறுநீரக நோய்த்தாக்குதலை முற்றாக ஒளிக்கும் திட்டத்தின் ஒரு செயலக வெளி ஆய்வலர்கலின் உதவியை பெருவதற்க்கு அரசங்கத்திநால் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் இன்நோய் பரவுவதை கட்டுப்படுத்துவதற்க்கு இன்நோய் ஏற்படுவதற்க்கான மூலகாரணத்தை அறிந்து கொள்வதற்க்கு செய்யும் நவின மற்றும் விறிவான ஆய்வுகலை நடாத்த உதவி வழங்குவதற்க்கு சீன அரசாங்கம் இணக்கம் தெறிவித்துள்ளது

அதற்கமைய முதலாவது புரிந்துணர்வு ஒப்பநதம் 2015 மார்ச் மாதம் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் கௌரவ ஜனாதிபதி அவர்கலின் சீன பயனத்தின்போது சீன விஞ்ஞான கல்வி யகத்தின் தலைவருக்கும் நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் கௌரவ அமைச்சருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டதுடன் இரண்டாவது புரிந்துணர்வு ஒப்பந்தம் 2016 ஜுன் மாதம் 26 ஆம் திகதி சூழல் ஆய்வுமையத்திற்கும் **(RCEES)** தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைகும் இடையில் கைச்சாத்திடப்பட்டது மூல காரணம் தெரியத சிறுநீரக நோய்க்கான நிறந்தர தீர்வை கண்டறிய நிதி உதவி வழங்குவதன் மூலம் நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமச்சுக்கு ஒத்துலைப்பு வழங்க சீன அரசாங்கம் இணக்கம் தெறிவித்துள்ளது

1. இனந்தெரியாத சிறுநீரக நோய்க்காரணியை ஆராய்வதற்க்கு ஆரம்ப கட்டபரிசோதனைகலைமேற்கொள்வதற்க்கு உயர் மட்ட நீர்பரிசோதனை கருவிகள் பொருத்தப்பட்ட ஆய்வுகூடம் ஒன்று கண்டியில் அமைத்தல்.

2. இலங்கையில் காரணம் தெரியத சிறுநீரக நோய்ஏற்படுவதற்க்கும் பரவுவதற்கு கரனமான விடயங்கலை கண்டறிதல்.

3. அநுராதபுர மாவட்டத்தில் நிலத்தடி நீரை பரிசோதனை செய்வதற்க்கும் மற்றும் பொலொன்னறுவையில் மழைநீர் சேகரிப்பு தொடர்பான ஒழுங்குமுறை வழிகாட்டல் திட்டங்கலை செயற்படுத்தல்

4. **GIS** அடிப்படையிலான கண்காணிப்பு முறைமையுடன் குடிநீர் சுத்திகரிப்பிற்கான முகாமைத்துவ தொகுதியினை அறிமுகப்படுபடுத்தல

5. அறிவுப் பகிர்ந்தளிப்புகள் மற்றும் ஆய்வுகள் தொடர்பாக உயர் கல்விக்கும் பயிற்சிகளுக்கும்ஒத்துலைப்பு வழங்குதல்

காரணம் அறியப்படாத சிறுநீரக நோய்க்கான மூலகாரணத்தை கண்டறிய அது தொடர்பாக சர்வதேசமட்ட ஆய்வுப் பயிற்சிப்பட்டரை ஒன்று 2016 மார் 15 மற்றும் 16 ஆகிய திகதிகலில் சீன விஞ்ஞான கல்வியகம் மற்றும் உள்நாட்டு நிபுணர்கள், நிபுணத்துவம் பெற்ற விஞ்ஞானிகள் ஆய்வாளர்கள் உள்ளிட்ட 60 பேரின் பங்குபற்றலுடன் நடத்தப்பற்றது.

சீன விஞ்ஞான கல்வி நிறுவனம் இலங்கை அரசாங்கத்திற்கு ரூபா 25 மில்லியன் பெறுமதியான நீர்ப் பரிசோதனை உபகர்னங்களை நன்கொடையாக வழங்கியது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நீர் சுத்திகரிப்பு தொடர்பான ஆராய்ச்சி மையம் மற்றும் உயர்தர ஆய்வுகூடத்தை அமைபதற்க்கு தொழில்நுட்ப ஆய்வுக் கற்கைகள் நிறைவடைந்துள்ளது.

கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் மழைநீர் சேகரிப்பிற்கான உபகரண தொகுப்பொன்றுஇன் நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது

சீன அரசாங்கம் மூலகாரணம் அறியப்படாத சிறுநீரக நோய் பரவும் பிரதேசங்களுக்கு மற்றும் கல்பிட்டி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் நீர் சுத்திகரிப்பு விநியோகத்திற்க்கு நீர் வடிஇயந்திரங்கள் 200 வழங்குவதிற்கு உறுதியலித்துள்ளது.







பவுசர் மூலம் நீர் வழங்கல் -மெதிரிகிறிய




வெலிகந்த மகவெவ கிராமத்தில் அமைக்குமநீர் சுத்திகரிப்பு இயந்திரம்



நீர் குழாய் நீடிப்பு – பரசன்கஸ்வெவ

## 02 SACOSAN (தெற்காசிய சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான மாநாடு) பிரகடனத்துக்கமைய சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்

சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான தெற்காசிய மாநாடு சார்க் வலய நாடுகளில் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்தும் அடிப்படைக் குறிக்கோளுடன் இரண்டு ஆண்டுகளுக்கொரு முறை குறித்த நாட்டு அரசாங்கங்களுடாக நடாத்தப்படும் மாநாடாகும சார்க் வலய நாடுகளிலுள்ள மக்களிடம் நீர் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பிலான எண்ணக்கருவை அரசியல் தலைமைத்துவத்தினூடாக மேம்படுத்துவதே இந்த மாநாட்டின் முதன்மைக் குறிக்கோளாகும். அதற்கமைய 2011 ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான நான்காவது தெற்காசிய மாநாட்டில் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்துக்கமைய சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 23 மில்லியன் ரூபா 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடாகக் கிடைத்தது.

இதன் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்களுக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் சமூக நீர் வழங்கல் திணைக்கள ஒத்துழைப்புடன் கீழ் குறிப்பிடப்பட்டுள் செயற்திட்டங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் வசித்துவரும் வருமானம் குறைந்த 448 குடும்பங்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை செய்துகொடுக்கப்பட்டதுடன் 2016 ஆண்டு இருதியில். 100% பௌதீக முன்னேற்றமும் நிதி முன்னேற்றமும் அடையாப்பட்டுள்ளது.

### தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகரசபை மற்றும் ஏனைய கடற்கரையோர பகுதிகளிற்கு பொது PP மாதிறி மலசலகூங்களை நிர்மாணித்தல்

மககள் அதிகமாக ஒன்று கூடும் பொது இடங்களில் **PP** மாதிறி மலசலகூடங்களை நிர்மாணிப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளதுஇதற்கமைய முதற்கட்டமாக ஏறாவூர்ப்பற்றில் அமைந்துள்ளசவுக்கடி கடற்கரையில் மாதிறி **PP** பொது மலசலகூடங்களை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. 2016 டிசம்பர் இருதியில் 100% பௌதீக முன்னேற்றமும் நிதி முன்னேற்றமும் அடையாப்பட்டுள்ளது.

### சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான VI தெற்காசிய மாநாடு

அரச ஒத்துலைப்புடன் நடாத்தப்படும் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான தெற்காசிய மாநாடு சுழற்சி முறையில் தொடர்ந்து ஒவ்வெரு சார்க் வலய நாடுகளிலும் வருடாந்தம் நடைபெறும் சுகாதாரப் பாதுகாப்பு பற்றி கவனம் செலுத்துவதற்கு மேடை கருத்தரங்குகள் நடாத்துவதுடன் பிராந்திய நிகழ்ச்சிகளை அபிவிருத்தி செய்ய முன்னைய அனுபவங்களிலிருந்து கற்கைகலை செயற்படுத்தல் மற்றும எதிர்கால இலக்குகளை அடைவது தொடர் சலுகைகள் வலங்குவதுடன் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான வலய நிகழ்ச்சிநிரல் தயாரித்தல் பற்றி எதிர் பார்க்கப்படும் இந்த மாநாடு நடைபெருவதன் நோக்கம் தெற்காசியாவில் சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் துப்பரவு மேம்பாட்டு முன்னேற்றத்தை அதிகரித்து மக்களின் வழ்கை நிலயை உயர்த்துவதாகும்

தேற்காசிய வலயத்தில் நல்ல சுகாதாரப் பாதுகாப்பு அபிவிருத்தியை நிரந்தரமாக ஏற்படுத்த அரசியல் அவதானத்தை செலுத்துவதற்க்கு இந்த மாநாடு ஒரு துண்டுகோலாக அமையும்.




**சுகாதார பாதுபகாப்பு தொடர்பான தொற்காசிய மாநாடு VI பங்களாதேஷ் - டாக்கா**

அதனடிப்படையில் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான VI தெற்காசிய மாநாடு 2016 ஆம் ஆண்டு ஜனவரி 11 – 13 ஆம் திகதி வரை பங்களாதேஷ் டாக்கா நகரில் நடைபெற்றது. அமைச்சு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாளமைப்பு சபை, தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் மற்றும் ஏனய பங்காளர்கள் சார்பில் 40 பிரதிநிதிகள் அடங்கிய குழு அமச்சு சார்பாக இந்த மாநாடில் பங்குபற்றியிருந்தனர் டாக்கா பிரகடனத்தின் அர்ப்பணிப்புகளை கருத்திற்கொண்டு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் அத்தீர்வுகள் தற்போது அமுல் படுத்தப்பட்டுள்ளது.

- குறிப்பாக இவ்வசதிகள் கிடைக்கப்பெறாத சிக்கலான பகுதிகலையும் உள்ளடக்கி சுகாதார பாதுகாப்பு மற்றும் ஆரோகியத்தை ஊக்குவித்து அபிவிருத்தி செய்தல்.

- கழிவுநீர் முகாமைத்துவம் தொடர்பான அகில இலங்கை ரீதியான கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்.

- பொதுமக்கழின் சுகாதார பாதுகாப்பு தொடர்பாக ஆய்வு நடாத்துதல்.

- சுகாதார பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய தேவைகல் தொடர்பாக இளைஞ்ஞர் மற்றும் பெண்கள் தொடர்பான விசேடகவனம் செலுத்துதல்.

## 03.மழைநீர் சேகரிப்பு நிகழ்ச்சித்திட்டம் (மழைநீர் தாங்கி)

பொதுமக்களிற்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்க்கு குழாய்நீர் விநியோக திட்டங்கள், நிர் பவுசர்கள், நீர் பீப்பாக்கள், எதிர்ப்பிரசாரண முறைத் திட்டங்கள் (RO) மேம்படுத்தப்பட்ட ஆழம்மில்லாத கிணற்றுத் தொகுதிகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு தொகுதிகள் போன்ற முறைகளை பின்பற்றுதல் விசேடமாக எமது நாட்டில் குறைந்த மழை வீழ்ச்சியைப் பெறும் (அதிதாழ் மழைவீழ்ச்சியை உடைய) பிரதேசங்களை இலக்காகக்கொண்டு அங்கு வாழும் மக்களின் நீர்த் தேவையை நிறைவேற்றுவதற்காக நீரை வழங்கும் முறைகளில் ஒன்றாக மழைநீர் சேகரிப்பு செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. 2016 ஆம் ஆண்டில் கிளிநொச்சி, மொணராகலை, புத்தளம் மற்றும் மஹியங்கனை போன்ற பிரதேசங்களுக்கு மழைநீர் சேகரிப்பு தாங்கிகலை அமைப்பதற்க்கு 05 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சத் திட்டமானது தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம் மற்றும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மூலம் செயற்படுத்தப்படும் 2016 டிசம்பர் மாத இறுதியில் 98% பௌதீக முன்னேற்றமும் 89% நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.





**மழைநீர்சேகறிப்பு தாங்கிகளின் பௌதீக அமைப்பின் முன்னேற்றம்**

| சேயற்பாடு | இடம்/மாவட்டம் | அலகுகளின் எண்ணிக்கை | மொத்த ஒதுக்கீடு | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 5 கன மீட்டர் மழை நீர் சேகரிப்பு தாங்கிகளை அமைத்தல் | கிளிநொச்சி<br>மொணராகலை<br>புத்தளம் | 24 தாங்கிகள்<br>24 தாங்கிகள்<br>24 தாங்கிகள் | 950,384 .00<br>950,384.00<br>950,384.00 | நிர்மாண பணிகள் முடிவடைந்துள்ளது<br>முடிவடைந்துள்ளது<br>முடிவடைந்துள்ளது |
| 5க.மீ. மற்றும்10 க.மீ மழை நீர் சேகரிப்பு தாங்கிகளை அமைத்தல் | மஹியங்கனை | 27 தாங்கிகள் | 2,148,848.00 | தாங்கி வாங்கப்பட்டு இடம் இனங்காணப்பட்டுள்ளது |
| **மோத்தம்** | | | **5,000,000.00** | |

## 04. நீரேந்து பகுதிகளைப் பாதுகாக்கும் செயற்திட்டம்

மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் நீர் மூலங்கள் மாசடைதலைதவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுப்பதும், சுத்தமான குடிநீரை வழங்குவதற்காக முக்கியமான காரணியான நீரோந்து பிரதேசங்களைக் பாதுகாப்பதற்காக அமைச்சினால் தே.நீ.வ.சபை மற்றும் தே.நீ.வ. திணைக்களத்தின் உதவியுடன் இந்த செயற்திட்டம் அமுலாக்கப்படுகிறது.

அதற்கமைய நீர் மூலங்களைப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அந்த பிரதேசங்களில் மண்ணரிப்புக்குட்பட்டுள்ள காணிகளை புனரமைத்தல், முறையற்ற பயன்பாடுகளைத் தவிர்தல், அந்த பிரதேசங்களை முகாமைத்துவம் செய்வதற்காக உகந்த வழிமுறைகளை பின்பற்றுவதற்கான கொள்கை தயாரிக்கப்பட்டது.



இரத்தினபுரி பல்மடுல்லை நீரேந்து எல்லைப்பரப்புக்குபாதுகாப்பு வேலி அமைத்தல்.



இரத்தினபுரி பெல்மடுல்லை நீரேந்து பிரதேச பாதுகாப்புக்கு தெளிவூட்டல் பலகைகளை பொருத்துதல்

ஆதன்கீழ் 2016 ஆண்டுக்கு 05 மி.ரூ நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் ஊவா, சப்ரகமுவ மற்றும் மத்திய ஆகிய மூன்று மாகாணங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது. அதற்கமைய 2016 ஆண்டின் இறுதியளவில் 100% பௌதீக முன்னேற்றம் மற்றும் நிதி முன்னேற்றமும் அடையப்பட்டுள்ளது.

- ஊவா மாகாண தியத்தலாவ நீர் விநியோக திட்டத்தின் கீழ் ஹகொல்ல நீரேந்து பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்
    - சிரமதான நிகழ்ச்சித்திட்டங்கள்
    - தெளிவூட்டல் பலகைகள் பொருத்துதல்
    - எல்லைகளை குறிக்கும் தூண்களை நடுதல்

- சப்ரகமுவ மாகாண எஹெலியகொட, பெல்மடுல்லை நீரேந்து பிரதேசங்களான
    - பிஸோதொலவை சுற்றி பாதுகாப்பு வேளி அமைத்தல்.
    - நீரேந்து பிரதேசங்களின் எல்லைகளை குறிக்கும் தெளிவூட்டல் பலகைகள் பொருத்துத்தல்
    - சேதனப்பசளை மரக்கறிப் பயிர்ச்செய்கை தொடர்பில் களப் பயிற்சி வழங்குதல்.
    - நீரேந்து பிரதேசங்கலை சுற்றி மரம் நடுதல்.
    - மலசலகூட வசதி அற்ற வீடுகளுக்கு மலசலகூட வசதி வழங்குதல



எஹெலிய கொட நீர் எந்து பிரதேசத்தை பாதுகாத்தல் -பாக்குமரம் நடுதல்



எஹெலிய கொட நீர் எந்து பிரதேசத்தை பாதுகாத்தல் -சேதன பயிர்ச்செய்கை

- **மத்திய மாகாணத்தின் ரிகில்ல கஸ்கட நீர் வினியோகமுறை**

  - முல்லோய தோட்டத்தில் 22 மலசலகூடங்கள் அமைக்கும் வேலைகள் ஆரம்பித்தல்
  - தொழில்நுட்ப அதிகரிகளுக்கு தெளிவூட்டும் கருத்தரங்குகள்
  - பாடசாலை மாணவர்களுக்கு தெளிவூட்டும் கருத்தரங்குகள்
  - முல்லோய ஆற்றுப்பகுதியில் மரம்நடுதல்
  - மாசடைந்த நீரரேந்து பிரதேசங்களை பாதுகாப்பதற்க்கு தெளிவூட்டல் பலகைகள் பொருத்துதல்
  - மாட்டுத்தொழுவத்தை அன்மித்து உயிர்வாயு அமைப்பொன்றை ஏற்படுத்துதல்

## 05. கிராமீய நீர்வழுங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு மேம்படுத்தல், சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம்

அடிப்படை வசதிகல் அற்ற கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கல்மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதனூடாக சுகாதார, மனிதவள அபிருத்தியினை மேம்படுத்தும் நோக்குடன் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது 2016 ஆண்டில் 200 மி.ரூ. செலவிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டுவரும் மட்டக்களப்பு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, பதுளை, மற்றும் மொனராகல கிராமீய நீர் வழுங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பை மேம்படுத்தல் ஆகிய செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. இதற்காக 2016 ஆண்டில் 119 மி.ரூ செலவிடப்பட்டுள்ளது. இதனையடுத்து காலி மாவட்டத்திற்க்கு 224 மலசலகூங்களும் அம்பன்தோட்டை மாவட்டத்தில் உள்ள திஸ்சமகாராமய பிரதேசத்திற்க்கு 50 மலசலகூங்களும் அமைபதற்க்கு நிதி ஒதுக்கிடு வழங்கப்பட்டுள்ளதுடன் நீரேந்து பிரதேசங்கலை சுற்றி மரம் நடுதல் தொடர்பாக நிதி ஒதுக்கிடு வழங்கப்பட்டுள்ளது.

## 06. கழிவுநீர் முகாமைத்துவம் மற்றும் மழைநீர் சேகரித்தல் தொடர்பில் உள்ளூராட்சி நிறுவனங்களின் தொழிநுட்ப அலுவலர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நடாத்துதல்

கழிவு நீர் மற்றும் மலக்கழிவகற்றல்அமைபபை திட்டமிட்டு அமைக்கும் போது கடைபிடிக்க வேண்டிய விடயங்கலை இலங்கை தர நிறுவனம் 2009 ஆண்டு பிரகன்டனப்படுத்தியது. இதற்கமைய கழிவு நீர் மற்றும் மலக்கழிவகற்றல் அமைப்பை திட்டமிட்டு அமைக்கும்போது பிரகன்டன படுத்தியுள்ள வளிகாட்டல் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகலை கடைப்பிடிப்பது பற்றி எதிர் பார்க்கப்படுகின்றது இதற்கமைய நிலம் மற்றும நிலத்தடி நீர் மாசு படுவதை தடுப்பதற்கு திட்டமிடுபவர்கள், உபதேசகர்கள் உறுதிப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அலுவலர்கள் உற்பட இவ்விடயம் பற்றிதொடர்புடயவர்களுக்கு இவ்விடயம் பற்றி தெளிவுபடுத்துவது மிகமுக்கியமாகும். உள்ளூராட்சி நிறுவனங்களின தொழிநுட்ப அலுவலர்களுக்கு கட்டிடம் அமைப்பதற்க்கு அனுமதி வழங்கும் உறிமைஉள்ளதால் நிலத்தடிநீர் மாசுபடுவதை தடுக்கும் பாறிய பொறுப்புக்கு ஒத்துலைப்பு வழங்கும் ஆற்றல் இவர்கலிடம் உள்ளது.

